# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடைமுறைகள் மற்றும் சிபார்சுகளை அமுல்படுத்துதல் தொடர்பான மதிப்பீடு



**உள்ளடக்கம்**


**1. நிறைவேற்றுப் பொழிப்பு 3-5**

**2. அறிமுகம் 5**

**2.1** நிறுவகக் கட்டமைப்பு 5

2.2 பின்னனி 6

**2.3** அடிப்படைச் செயற்பாடுகள் 6-7

**2.4** கணக்காய்விற்கான அதிகாரம் 7

**2.5** கணக்காய்வின் தேவைப்பாடு மற்றும் தலைப்பை தெரிவு செய்வதற்கான காரணம் 7-8

**2.6** கணக்காய்வின் நோக்கம் 8

2.7 கணக்காய்விள் நோக்கெல்லை 8-9

**2.8** மட்டுப்படுத்தல்கள், அரிதான மீறல்கள், பரிகாரங்கள் என்பன 9

2.9 கணக்காய்வு வரையறைகள் 9

**3. விபரமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 10**

**3.1.** ஆணைக்குழுவின் பின்னனி 10

**3.1.1** ஸ்தாபித்தல், கூட்டினைத்தல், மற்றும் பதவிக்காலம் 10

**3.1.2** ஆனைக்குழுவினை அமைத்தலும் ஸ்தாபித்தலும் 10-11

**3.1.3** மனித வளங்கள் முகாமைத்துவம் 11-13

**3.1.4** ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அமுல்ப்படுத்தும் மட்டம் 13-14

**3.1.5** நிறுவனத்தின் உள்ளகத் திட்டங்களும் சேவை நாடுனர்களுக்கு வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களும் 14

**3.2** ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுதல் 15

**3.2.1** முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் நிராகரித்தல் 15-16

**3.2.2**நிறுவனத்தின் முறைப்பாமுகளை புலனாய்வு செய்யும் வேலைத்திட்டம் 16-18

**3.2.3** முறைப்பாமுகளை புலனாய்வு செய்யும் செயற்திறன் 18-19

**3.2.4.** ஆணைக்குழுவினால் சிபார்சுகளை வழங்குதல் 20-23

**3.2.5.** ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகளின் செயல் முன்னேற்றம் 23-25

**4. கணக்காய்வு அவதானிப்புக்கள் 25-28**

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

-------------------------------------------

1978 அரசியலமைப்பின் III ஆவது அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அடிப்படை மனித உரிமைகளாவன சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம், சித்திரைவதைக்குள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம், சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமம் என்பதற்கான உரிமை, விசாரணையின்றி சிறைவைப்பதிலிருந்தும், தடுத்து வைப்பதிலிருந்தும், தண்டனை வழங்குவதிலிருந்தும், சுதந்திரம், எதிர்காலத்தில்அமுலாகும். தண்டனைச் சட்டங்களை விதிப்பதனைத் தடை செய்தல், பேசுதல், ஒன்று சேர்த்தல் கம்பனியில் தொழில் புரிதல்,போகுதல், வருதல், முதலியவற்றிற்கான சுதந்திரம், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் முதலியவாறானவைகளாகும். இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை மீறுதல் மற்றும் மீறுவதற்கு அண்மித்த சந்தர்ப்பங்களில் இலங்கை பிரசைக்கு முறைப்பாடு செய்யக்கூடிய நிறுவனமாக இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரே நிறுவனம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்தவராக இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு குறிப்பாக நடவடிக்கை எடுப்பதனை வலுப்படுத்துவதற்கும் சர்வதேச உடன்படிக்கையின் மூலம் இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் வாக்குறுதிகளையும் சர்வதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கும் 1996 ஆம் ஆண்டின் போது இலங்கை அரசாங்கத்தினால் பிரான்சு தத்துவத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட தரத்தினைப் பேணுவதற்காகவுமாக 1996 இன் 21 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும்ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானதுசுதந்திரமான ஒரு ஆணைக்குழுவாகும்.

மனித உரிமைகளை மீறுவதன் மூலம் பொது மக்களுக்கு சமூகத்தில் சமமான மற்றும் நியாயமான சந்தர்ப்பம் இழக்கப்படுகையில் பல்வேறு சிக்கலான நிலைமை உருவாகின்றது. தனிப்பட்டவர்களின் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக தெரிந்து கொண்டுள்ள நபர்கள் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பார்கள். இவ்வாறு முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கையில் அவற்றிற்காக சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்கு நீண்டகாலம் எடுத்தலும் முறைப்பாடுகளை விசாரித்து வழங்கப்படுகின்ற சிபார்சுகளை நிறுவனத்தினால் அமுல்படுத்தாமையும் காரணமாக அதற்காகத் தாக்கமளிக்கும் காரணங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யும் வகையில் இச் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக் கணக்காய்வின் நோக்கமானது இலங்கையர்களின் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக முறைப்பாட்டினைப் பெற்ற நேரத்திலிருந்து அதனை விசாரித்து உரிய தரப்பினர்களுக்கு சிபார்சுகளை வழங்கியதன் பின்னர் அதனை அமுல்ப்படுத்தும் வரையான கட்டம் சம்பந்தப்பட்ட நடைமுறையே செயலாற்றல் மதிப்பீடாகும். இதன் போது இலங்கை பொலிஸ், கல்வி அமைச்சு, ஓய்வூதியத் திணைக்களம் என்பன தொடர்பாக வழங்கிய சிபார்சுகள் மாத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதில் இனங்காணப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களானவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகையில் வெற்றிடமாக காணப்படுகின்ற அங்கீகரித்த 118 பதவிகளில் 98 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக 2015,2016,2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இறுதியில் புலனாய்வு நடவடிக்கை முடிவுறுத்தப்படாத கோவைகளின் எண்ணிக்கை 3576, 5710,10201 மற்றும் 8812 ஆக இருந்தமையும் முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் வழங்குவதற்கு 2 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்தமையாகும்.

1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 15(8) ஆம் பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகள் உரிய காலத்தில் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடுதல் தவறப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது சிபார்சுகளை அமுல்ப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுப்பதாகக் கருதியுள்ள நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தின் பிரகாரம் போதியல்லாத சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவினால் அவ்விடயம் தொடர்பாக முழுமையான அறிக்கையை சனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆணைக்குழுவின் தந்திரோபாயத் திட்டத்திலும் அதிகாரச் சட்டத்திலுள்ள பலவீனங்களைக் சுட்டிக்காட்டியிருந்தும் 1996 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரச் சட்டத்தை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவின் முறைப்பாடுகளை புலனாய்வு செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள பரீசீலனை மற்றும் புலனாய்வு பிரிவிற்குரிய 22 சட்ட உத்தியோகத்தர் பதவிகளில் 21 பதவிகளும் 47 மனித உரிமை உத்தியோகத்தர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்படுதல் சிபார்சுகள் வழங்குதல் தாமதமடைந்தமைக்குத் தாக்கமளித்திருந்தது. 1996 இன் 21 ஆம் இலக்க ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களும் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து விளக்கங்களின் பட்டியல்களும் அவ்விளக்கங்கள் சம்பந்தமாக ஆணைக்குழுவின் சிபார்சுகளும் உள்ளடங்கிய அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றதில் முன்வைக்கப்படவில்லை. மேலும் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகள்

ஏனைய நிறுவனங்களுக்கு தாக்க மேம்படுத்தும் சட்ட விதிகளுடன் பொருந்தியிருக்காத சந்தர்ப்பங்களும் இணைவாக விசாரணைகளை நடாத்துகின்ற நிறுவனங்களின் சிபார்சுகளுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

எங்களின் கணக்காய்வு சிபார்சுகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சமூகத்திற்கு மிகவும் உயர்தரமான சேவையை நிறைவேற்றுகின்ற ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான ஒரு நிறுவனமாக மாற முடியும் என்பது எங்களின் முடிவுரையாகும்.

## 2. அறிமுகம்

----------------

### 2.1 நிறுவகக் கட்டமைப்பு

-----------------------------------

இலங்கையில் மனித உரிமையை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான ஒரு சுயாதீன ஆணைக்குழுவாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு அங்கத்தவராக நாட்டில் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கு குறிப்பாக நடவடிக்கை எடுப்பதனை வலுப்படுத்துவதற்கும் சர்வதேச உடன்படிக்கையின் மூலம் இலங்கைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்பாடுகளை சர்வதேச மட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்கும் 1996 ஆம் ஆண்டின் போது இலங்கை அரசாங்கத்தினால் பிரான்சு தத்துவத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட தரத்தினை பேணும் குறிக்கோளை முன்னிலைப்படுத்தி 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் இலங்கை பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறுகின்ற சுயாதீனமான ஆணைக்குழுவாகச் செயற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆணைக்குழுவின் பிரதான கடமையான அடிப்படை உரிமைகளை மீறுதல் அல்லது மீறுவதற்கு அண்மித்தாக இருத்தல் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை செய்தல் மற்றும் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவில் விசாரணை மற்றும் புலனாய்வாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

## 2.2 பின்னணி

சட்டத்தில் அதிகாரம் தொடர்பாக உள்ள கௌரவத்தை பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் அனைத்து பிரசைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆணைக்குழுவின் தூர நோக்கமாகும். சர்வதேசசட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் மிகவும் சிறந்த மனித உரிமைக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக அனைவர்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலினை முன்னிட்டு அமுல்ப்படுத்தப்படுகின்ற அனைத்து பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பில் இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து பிரசைகிளனதும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும் தேசிய சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை சர்வதேச சட்டங்களுக்கும் இணக்கப்பாடுகளுக்கும் ஒத்த வகையில் தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு வழிகாட்டுவதும் மனித உரிமைகள் தொடர்பான அறிவினை நாடு முழுவதும் வசிக்கின்ற அனைத்து நபர்களுக்கும் மத்தியில் பிரபல்யப்படுத்துவதும் ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகும்.

## 2.3 அடிப்படைச் செயற்பாடுகள்

1978 அரசியலமைப்பின் III ஆவது அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறுதல் மற்றும் மீறுவதற்கு அண்மித்ததாக இருக்கின்ற சந்தர்ப்பங்களின் போது இலங்கை பிரசை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் இலங்கை குடியரசு அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரசைகளின் எந்தவொரு அடிப்படை உரிமையையும் பிரசையினால் அடைந்து கொள்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுகின்றது. அதற்கிணங்க ஆணைக்குழுவின் அடிப்படைச் செயற்பாடுகள் பின்வருமாறாகும்.

(அ) அடிப்படை உரிமைகள் தொடர்பாக அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் எண்ணித்தில் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு கௌரவமளித்தல் மற்றும் அவற்றினைப் பின்பற்றுவதனை மேம்படுத்தும் வகையில் நிறைவேற்று ரீதியான மற்றும் நிருவாக ரீதியான நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பாக கண்காணிப்பாக இருத்தல்.

(ஆ) அடிப்படை உரிமைகளை மீறுதல் அல்லது மீறுவதற்கு ஒத்தாசையாக இருத்தல் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பாக விசாரித்தல் மற்றும்

புலனாய்வு செய்தல் மற்றும் இதில் இதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இணங்க இணக்கம் செய்வித்தல் மற்றும் சமாதானப்படுத்தும் வாயிலாக அவற்றை தீர்த்து வைக்கப்பட்டதற்காக ஏற்பாடுகளை வழங்குதல்

(இ) அடிப்படை உரிமைகளை மேம்படுத்தும், அபிவிருத்தி செய்யும் மற்றும் பாதுகாக்கும் சட்டரீதியான மற்றும் நிருவாக ரீதியான ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரிக்கும் வகையில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதலும் உதவியளித்தலும்

(ஈ) தேசிய சட்ட மற்றும் நிருவாக நடைமுறைகள் சர்வதேச மனித உரிமைகளுக்கு, ஒழுங்குபடுத்தலுக்கு மற்றும் அங்கீகாரத்திற்கு இணங்கியுள்ளது என்று சான்றுபடுத்தும் வகையில் எடுக்க வேண்டிய நடைமுறைகள் சம்பந்தமாக அரசாங்கத்திற்குச் சிபார்சுகளைச் சமர்ப்பித்தல்.

(உ) மனித உரிமைகள் துறையில் உடன்படிக்கைகளுக்கும் ஏனைய சர்வதேச பொறிமுறைகளுக்கும் பங்களிப்புச் செய்யும் மற்றும் இணங்கிக் கொள்ளும் தேவைப்பாடு தொடர்பாக அரசாங்கத்திற்குச் சிபார்சுகளை சமர்ப்பித்தல்.

(ஊ) மனித உரிமைகள் தொடர்பான தெளிவுபடுத்தலை மேம்படுத்துதல் மற்றும் மனித உரிமைகளுக்கு இணங்கிய வகையில் கல்வியை வழங்குதல்.

**2.4 கணக்காய்விற்கான அதிகாரம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் எனது ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

**2.5 கணக்காய்வின் தேவைப்பாடு மற்றும் தலைப்பை தெரிவு செய்வதற்கான காரணம்**

மனித உரிமைகளை மீறுவதன் மூலம் பொது மக்களுக்கு சமூகத்தில் சமமான மற்றும் நியாயமன வாய்ப்பு இழக்கப்படுவதன் மூலம் சமூகத்திலிருந்து விலகிச் செல்வதனூடாக மனநிலை பாதிப்படைவதும் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதும் இடம் பெறுகின்றன.

பொது மக்களால் மனித உரிமைகளை மீறுகின்றமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் மேற்கொள்கையில் சிபார்சுகளை

வழங்குவதற்கு அதிக காலம் எடுப்பதும் முறைப்பாடுகளை விசாரணை செய்து வழங்கப்படுகின்ற சிபார்சுகள் உரிய நிறுவனங்களினால் அமுல்ப்படுத்தப்படாமையும் காரணமாக பொதுமக்களுக்கு நியாயம் கிடைப்பதில்லை என்பதாக பொது மக்களுக்கு மத்தியில் அபிப்பிராயம் தோன்றியுள்ளாமையின் காரணமாக இச் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.6 கணக்காய்வின் நோக்கம்

கணக்காய்வின் நோக்கமானது இலங்கையில் அடிப்படை உரிமைகளை மீறுதல் அல்லது மீறுவதற்கு ஒத்தாசையாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நேரடியான ஆக்கபூர்வமான ஈடுபாடு மற்றும் அவர்களினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகளை நடைமுறையில் அமுல்படுத்தலின் செயலாற்றல் தொடர்பாக பரீட்சித்தலாகும்.

## 2.7 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் எங்களுக்கு அத்தியாவசியமானது எனக் கருதுகின்ற பரீட்சிப்புக்களும் அதில் உள்ளடக்கப்பட்டன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இதயபூர்வமான செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பாகவும் அதன் முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வு பிரிவின் இனங்காணப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பாகவும் காணப்படுகின்ற ஆபத்துக்கள் மற்றும் சவால்கள் சம்பந்தமாக அறிவுகள் எங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் செயலாற்றல் கணக்காய்வின் காண்புகள் மற்றும் சிபார்சுகள் தொடர்பாக முடிவுரைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டன.

(அ) எங்களால் போதியளவானது எனக் கருதுகின்ற மற்றும் அது தொடர்பாக நியாயமான இறுதி தீர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு எங்களுக்கு முடியுமான வகையில் உரிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடிப்படைச் செயற்பாடுகளை நிறைவேற்றுகையில் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அளவு மற்றும் தன்மையின் அடிப்படையில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் எங்களின் கணக்காய்வு நடைமுறைகளின் அளவும் தன்மையும் மாற்றமடைந்துள்ளது.எங்களின் கணக்காய்வு நடைமுறைகளுக்கு விசாரணைகள் பரீட்சிப்புக்கள் மற்றும் சிபார்சுகளுக்கு உதவியளிக்கும் வகையில் சான்றுகளைப் பரீட்சித்தலும் உள்ளடக்கப்பட்டன.

(ஆ) எங்களின் நோக்கெல்லையானது இலங்கை அரசாங்கத்தின் பிரதான 03 அரசாங்க நிறுவனங்கள் சம்பந்தமாகவும் (இலங்கை பொலிசு, ஓய்வூதியத் திணைக்களம், கல்வி அமைச்சு என்பன) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்குகின்ற சிபார்சுகள் சம்பந்தமாகவும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இச் செயற்பாடு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டு கணக்காய்வுத் திட்டத்திற்குத் தொடர்புபடுத்தப்பட்டது. செயலாற்றல் கணக்காய்வின் போது எங்களது காண்புகளை அடிப்படையாகக் கொண்டு இவை மாற்றமடையும் அதற்கிணங்க எங்களின் கணக்காய்வு நோக்கெல்லை விசேட சந்தர்ப்பத்தின் அடிப்படையில் மாற்றமடைந்துள்ளது.

## 2.8 மட்டுப்பாடுகள், அரிதான மீறல்கள், பரிகாரங்கள் என்பன.

---------------------------------------------------------------------------------------------

செயலாற்றல் கணக்காய்வின் அளவு, காலம் மற்றும் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொள்ளக் கூடிய மனித வளங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு நடைமுறைக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. முறைபாடுகளுக்கான சிபார்சுகளை வழங்குவதற்கு சில ஆண்டுகள் எடுத்துள்ளதனால் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக முறைப்பாட்டாளர்களுடன் தொடர்பு கொள்வது சிக்கலானதாகக் காணப்பட்டது ஆணைக்குழுவினால் தகவல்களைச் சமர்ப்பிப்பதில் தாமதமும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மாற்றங்களுக்கு உட்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்படுவதும் நோக்கெல்லையை மட்டுப்படுத்துவதற்கு காரணமாக இருந்தது.

## 2.9 கணக்காய்வு வரையறைகள்

-----------------------------------------------

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

(ஆ) 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டம்

(இ) ஆணைக்குழு சிபார்சுகளும் அமுல்ப்படுத்தும் நடைமுறைகளும்

(ஈ) செயல் முன்னேற்ற மீளாய்வு அறிக்கை / சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கின்ற ஆண்டறிக்கை

(உ) செயல் நடவடிக்கைத் திட்டம்.

## 3. விபரமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

----------------------------------------------

### 3.1 ஆணைக்குழுவின் பின்னணி

---------------------------------------------

#### 3.1.1 ஸ்தாபித்தல், கூட்டிணைத்தல் மற்றும் பதவிக்காலம்

-----------------------------------------------------------------------------------

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் இலங்கை அரசியலமைப்பின் சிபார்சின் அடிப்படையில் சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுகின்றார்கள். மனித உரிமைகளுக்குரிய விடயங்கள் சம்பந்தமான அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ள ஐந்து அங்கத்தவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ளடங்கியிருப்பார்கள்.அந்த அங்கத்தவர்களுக்கு மத்தியில் ஒரு அங்கத்தவர் தலைவராக சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுவார்.ஆணைக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் மூன்று ஆண்டுகள் காலம் பதவி வகிப்பார்கள் இதற்கிணங்க செயற்படுகின்ற ஆணைக்குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் தரப்படுகின்றன.

#### 3.1.2 ஆணைக்குழுவினை அமைத்தலும் ஸ்தாபித்தலும்

-----------------------------------------------------------------------------------

(அ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தற்பொழுது ‘‘இலக்கம் 14 ஆர் டீ மெல் மாவத்தை கொழும்பு 04’’ என்ற இடத்தில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் 28,505 சதுர அடியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் வருடாந்த வாடகையாக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 35,880,000 ரூபா 36,144,000 மற்றும் ரூபா 36,432,000 செலுத்தப்பட்டது.

(ஆ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குவிற்கு நாளாந்தம் பொது மக்கள் அதிக அளவில் வருகை தருகின்ற போதிலும் அந்த இடத்தில் பொது மக்களுக்கு வாகனங்களை நிறுத்துவதற்காக போதிய வசதிகள் இல்லாததுடன் இரண்டு தனிப்பட்ட வாகனங்களை மாத்திரம் நிறுத்துவதற்கான வசதிகள் காணப்பட்டன.

(இ) ஒரு திசையில் வாகனம் ஓடும் ஒரு வீதியில் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவிற்கு அடிக்கடி இலங்கை கிராமிய மக்கள் வருகை தருவதனால் அவர்கள் அடிக்கடி நிறுவனம் அமைந்துள்ள இடத்தினை தேடிக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

(எ) அதற்கிணங்க கொழும்பை உள்ளடக்கிய அண்மித்த பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நிறுவனத்தை தேடிக்கண்டு பிடித்தல் சிக்கல் இல்லாதிருந்தும் கிராமிய மக்களுக்கு நிறுவனத்தை தேடிக் கண்டு பிடிப்பதில் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக சபையின் அலுவலகத்தைஸ்தாபிக்கும் போது பொது மக்களுக்கு ஏற்டக்கூடிய சிக்கல்கள் தொடர்பாக கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

---

1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 22(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுகையில் ஆணைக்குழுவிற்கு உதவியளிக்கும் வகையில் தேவைப்படக் கூடிய ஏனைய ஏதாவது உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமிக்கக் கூடியதாக இருந்த போதிலும் 2019 யூலை 31 ஆந் திகதி வரை ஆணைக்குழுவின் பதவிகளில் 98 வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விபரம் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது.

#### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்

---

ஆணைக்குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக வெற்றிடமாகக் காணப்பட்ட 118 பதவிகளுக்கு பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். அவற்றிற்கு மத்தியில் ஆணைக்குழுவின் அடிப்படைக் கடமையான முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் நடவடிக்கைக்கு நேரடியாகச் சம்பந்தப்படுகின்ற 22 சட்ட உத்தியோகத்தர்களும் 47 மனித உரிமை உத்தியோகத்தர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். மேலும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை சிறந்த நிருவாகத்துடன் பேணுவதற்காக 05 பணிப்பாளர்கள் பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) பதவியணியினர்களைச் சேர்த்துக்கொள்ளல்

---

ஆணைக்குழுவின் அனைத்து பதவியணியில் 98 பதவிகள் 2019 யூலை 31 ஆந் திகதியில் வெற்றிடமாகக் காணப்பட்டன ஆணைக்குழுவிற்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்காமை இதற்குத் தாக்கமளித்திருந்தது. இச் செயற்பாட்டிற்காக பல ஆண்டுகள் எடுத்திருந்ததுடன் 2018 மே 17 ஆந் திகதி ஆட்சேர்ப்பு நடைமுறை அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டிருந்ததன.பணிப்பாளர்கள் பதவிக்காக ஏனைய தகைமைகளுடன் முகாமைத்துவ மட்டத்தில் 15 ஆண்டுகள் சேவை அனுபவமுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. எனினும் அதற்காக 15 ஆண்டுகள் சேவை அனுபவமுள்ள

எந்த விண்ணப்பதாரர்களும் இல்லாததினால் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்தது.

**(இ) மேற்பார்வை**

-------------------

வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 05 பதவிகளும் மற்றும் 03 உதவிப் பணிப்பாளர்கள் பதவிகளையும் உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரத்திலுள்ள 43 பதவிகளில் 35 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அது மொத்த நிறைவேற்று தரத்திலுள்ள பதவிகளில் 79 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. இதன் காரணமாக நிறுவனத்தின் நடவடிக்கைகளை முறையான மேற்பார்வையுடன் பேணுவதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) வேலைகளை ஒப்படைத்தல்**

---------------------------------------------

ஆணைக்குழுவின் அடிப்படைக் கடமையான முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் செயற்பாடு ஒப்படைக்கப்பட்டுள்ள விசாரணை மற்றும் புலனாய்வு பிரிவிற்குரிய 22 சட்ட உத்தியோகத்தர் பதவிகளில் 21 பதவிகளும் 47 மனித உரிமை உத்தியோகத்தர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. இதன் காரணமாக முறையாக வேலைகளை ஒப்படைப்பதற்கு முடியாதிருந்ததுடன் வருடாந்தம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்து முடிவுறுத்த முடியாதிருந்தது எனவும் ஒவ்வொரு ஆண்டும் புலனாய்வுச் செயற்பாடு முடிவுறுத்தப்படாத அதிக அளவான கோவைகள் ஆண்டு இறுதியில் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.கடந்த நான்கு ஆண்டுகளில் புலனாய்வு நடவடிக்கை முடிவுறுத்தப்படாத கோவைகளின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| | 2015.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு | 2016.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு | 2017.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| புலனாய்வு நடவடிக்கை முடிவுறுத்தப்படாத கோவைகளின் எண்ணிக்கை | 3576 | 5710 | 10201 | 8812 |

**வெற்றிடம் சம்பந்தமாக ஆணைக்குழுவின் கருத்துரைகள்**

பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்படுவதற்கு பிரதான காரணம் ஆணைக்குழுவிற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்காமை தாக்கமளித்துள்ளது. எனவும் இறுதியாக ஆட்சேர்ப்பு நடைமுறை 2018 மே 17 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் காட்டப்பட்டிருந்தது. மேலும் ஊழியர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்குரிய இறுதி அறிவித்தல் 2019 ஆகஸ்ட் மாதம் வரை கிடைத்திருக்காததனால் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது எனவும் காட்டப்பட்டிருந்தது.

**3.1.4 ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அழுல்ப்படுத்தும் மட்டம்**

(அ) 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 15(8) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சு யாராவது ஒரு அதிகாரி அல்லது ஒரு நபர் அல்லது நபர்களினால் அச்சிபார்சில் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதற்கு தவறியுள்ள சந்தர்ப்பம் அல்லது அந்நபரினால் ஆணைக்குழுவிற்கு அறிவித்து ஆணைக்குழுவின் சிபார்சினை நிறைவேற்றும் வகையில் அவரினால் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுப்பதற்கு கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தின் பிரகாரம் போதியல்லாத சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவினால் அவ்விடயம் தொடர்பான முழுமையான அறிக்கையை சானதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் இவ்வறிக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் உரிய ஆண்டின் ஆணைக்குழுவின் அனைத்து செயற்பாடுகள் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும், மேலும் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து விடயங்கள் சம்பந்தமான ஆணைக்குழுவின் சிபார்சுகளும் அந்த அறிக்கையில் உள்ளடக்ககப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகளுக்காள ஆண்டறிக்கைகள் 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.5 நிறுவனத்தின் உள்ளகத் திட்டங்களும் சேவை நாடுனர்களுக்கு வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களும்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

(அ) நிறுவனத்திற்கு வருகை தருகின்ற பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்வது எவ்வாறான முறைப்பாடுகளுக்கு என்பது தொடர்பான புரிந்துணர்வினை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிறுவனத்தில் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் மற்றும் அந்த இடங்களுக்கு பயணம் செய்யக் கூடிய முறைமைகள் தொடர்பான வழிகாட்டல்களும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவின் கடமைகளாக இனங்காணப்பட்ட செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொண்டு பொது மக்களுக்கு உயர்தரமான சேவைகளை வழங்கும் வகையில் ஆணைக்குழு ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுதல்

### 3.2.1 முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல் மற்றும் நிராகரித்தல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற முறைப்பாடுகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது ஆணைக்குழுவிற்கு அடிக்கடி நோக்கெல்லைக்கு உரியதல்லாத முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படும் போக்கு காணப்பட்டது. தலைமை அலுவலகத்தினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை 9298 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 3576 | 5750 | 10241 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 4970 | 7712 | 3389 |
| ஆண்டிற்கான மொத்த முறைப்பாடுகள் | 8546 | 13,462 | 13630 |
| நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 2414 | 2571 | 4313 |
| தீர்வு காணப்பட வேண்டிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 6132 | 10891 | 9317 |

(ஆ) தோற்றுவிக்கப்பட்டுள்ள 10 பிராந்திய அலுவலகங்களிலும் தகவல்கள் கோரப்பட்டிருந்தும் 04 பிராந்திய அலுவலகங்களினால் மாத்திரம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 04 பிராந்திய அலுவலகங்களுக்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| | --------- | -------------- | ---------------- |
| 04 பிராந்திய அலுவலகங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1991 | 1764 | 1414 |
| அந்த 04 அலுவலகங்களினால் நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 163 | 238 | 226 |


மேலும் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக முறையான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்காமையின் காரணமாக எங்களின் நோக்கெல்லை மேலும் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு அடிக்கடி நோக்கெல்லைக்கு தொடர்பற்ற முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்கு கிடைப்பதற்கு காரணமாக ஆணைக்குழுவின் நோக்கெல்லைக்குரியதல்லாத முறைமை தொடர்பாகவும் ஆணைக்குழுவிற்குரியதான நோக்கெல்லை தொடர்பாகவும் பொது மக்கள் போதியளவல் தெரியப்படுத்தாமை காரணமாக இருந்தது.

### 3.2.2 நிறுவனத்தில் முறைப்பாடுகளை புலனாய்வு செய்யும் வேலைத்திட்டம்

----------------------------------------------------------------------------------------------------------------

ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தமாக பல கட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படுவதுடன் இறுதியில் சிபார்சுகள் வழங்கப்படுகின்றது. சிபார்சுகள் வழங்கப்பட்டதன் பின்னர் சிபார்சுகளை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக ஆணைக்குழு பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் சிபார்சுகள் அமுல்ப்படுத்தாமை சம்பந்தமான அறிக்கை ஆணைக்குழுவினால் சனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட கட்டங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

**முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றலும் பதிவு செய்தலும்**



(அ) ஆணைக்குழுவினால் முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்படுகையில் ஆணைக்குழுவின் நோக்கெல்லைக்குரியதல்லாத முறைப்பாடுகள் நிராகரிபிக்கப்படுவதுடன் நோக்கெல்லைக்குரியதான முறைப்பாடுகளைப் பதிவு செய்து இலக்கத்தை வழங்கி பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றது அதன் பின்னர் முறைப்பாடுகளை கணனிமயப்படுத்தி உரிய பிரிவிற்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. புலனாய்வு உத்தியோகத்தர்கள் முறைப்பாடுகளுக்குரிய தகவல்களை கோருவதுடன் அழைப்பாணை மூலம் இரண்டு தரப்பினர்களும் அழைக்கப்படுகின்றார்கள் புலனாய்வின் போது இரண்டு தரப்பினர்களும்இணங்கிக் கொள்வார்களாகயிருந்தால் இணக்கப்பாடு ஏற்படுத்தப்படும் அவ்வாறு இல்லாதிருந்தால் முறைப்படியாக புலனாய்வினை மேற்கொண்டு புலனாய்வு உத்தியோகத்தர்களால் புலனாய்வு அறிக்கையினைத் தயாரித்து விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

(ஆ) விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளரினால் புலனாய்வு அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஆணைக்குழுவினால் புலனாய்வு அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு தவறுகள் இல்லையாயின் தவறுகள் இல்லை எனத் தெரிவித்து சிபார்சுகள் வழங்கப்படுகின்றது. இவ்வாறு நீண்ட செயற்பாடுகளின் பின்னர் வழங்கப்படுகின்ற சிபார்சுகளும் அமுல்ப்படுத்தப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.2.3 முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் செயற்திறன்

---

(அ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் கிடைத்த முறைப்பாடுகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3576 முறைப்பாடுகள் எஞ்சியிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை தலைமை அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 16,071 ஆகும். அதற்கிணங்க மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 19,647 ஆகும். அம் முறைப்பாடுகளில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 9298 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க சிபார்சுகளை வழங்குவதற்கு அல்லது இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு எஞ்சியிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 10394 ஆகும். இம் முறைப்பாடுகளில் சிபார்சுகள் வழங்குவது, இணக்கப்பாட்டிற்கு வருவது,நீதிமன்றம் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் முறைப்பாட்டாளர்களினால் நீக்கிக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் மொத்தம் 1497 ஆகும். மேலும் தீர்த்து வைப்பதற்கு எஞ்சியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 8852 ஆகும்.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் சிபார்சுகள் வழங்க வேண்டியிருந்த 8546 முறைப்பாடுகளில் 2412 முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள 6132 முறைப்பாடுகளில் 41 சிபார்சுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 83 முறைப்பாடுகளை இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 187 முறைப்பாடுகள் முறைப்பாட்டாளர்களால் நீக்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 71 முறைப்பாடுகள் நீதிமன்றம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(இ) 2017 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 5750 முறைப்பாடுகள் எஞ்சியிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் 7712 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. 2017 ஆம் ஆண்டில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2571 முறைப்பாடுகள் நீக்கிக்கொள்ளப்பட்டிருந்தன. எஞ்சியுள்ள 10891 முறைப்பாடுகளில் 84 முறைப்பாடுகளுக்காக சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 195 முறைப்பாடுகள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 346 முறைப்பாடுகள் முறைப்பாட்டாளர்களால் நீக்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 25 முறைப்பாடுகள் நீதிமன்றம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2018 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 10241 முறைப்பாடுகள் காணப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் 3389 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. 2018 ஆம் ஆண்டில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 4313 முறைப்பாடுகள் நீக்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள 9277 முறைப்பாடுகளில் 95 முறைப்பாடுகளுக்காக சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், 114 முறைப்பாடுகள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. அவ்வாறே 175 முறைப்பாடுகள் முறைப்பாட்டாளர்களால் நீக்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 81 முறைப்பாடுகள் நீதிமன்ற மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. விபரம் அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.2.4 ஆணைக்குழுவினால் சிபார்சகளை வழங்குதல்

---

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அடிப்படைக் கடமையாகக் கருதப்படுகின்ற ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்யும் போது அதற்காக நீண்ட காலம் எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவினால் வழங்கபட்டிருந்த சிபார்சுகளுக்கு மத்தியில் சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்டாதிருந்த முறைப்பாடுகள் தொடர்பாக சிபார்சுகளை வழங்குவதற்காக எடுத்திருந்த காலம் கீழே பொழிப்பாக்கித் தரப்படுகின்றது.

#### (அ) இலங்கை பொலிசு

---


ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை பொலிசுக்கு 50 சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 45 சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த 45 சிபார்சுகளை வழங்குவதற்காக ஆணைக்குழு எடுத்த காலம் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகளாக இருந்ததுடன் ஆகக் கூடியது 06 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது. விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| காலப்பகுதி | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| 2 ஆண்டுகளுக்கு குறைய | 0 | 0 |
| 2-4 ஆண்டுகளுக்கிடையே | 17 | 38 |
| 4-6 ஆண்டுகளுக்கிடையே | 17 | 38 |
| 6 ஆண்டுகளுக்கு மேல் | 11 | 24 |

**இலங்கை பொலிசு**

**முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக எடுத்த காலம்**

**----------------------------------------------------------------------------------------------**





மேலே குறிப்பிடப்பட்ட 45 சிபார்சுகளையும் வழங்குவதற்காக ஆணைக்குழுவினால் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. அந்த 45 சிபார்சுகளில் 28 சிபர்சுகளை வழங்குவதற்காக 04 ஆண்டுகள்கு மேற்பட்டு காலம் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு மத்தியில் சிபார்சுகளை வழங்குவதற்கு 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்த முறைப்பாடுகள் 03 ஆகும். 1996 இன் 21 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழு அங்கத்தவர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருந்த போதிலும் இலங்கை பொலிசுக்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த சிபார்சுகளில் அமுல்ப்படுத்தப்படாதிருந்த 37 சிபார்சுகளுக்காக சிபார்சுகளை வழங்கும் போது மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது.

## (ஆ) கல்வி அமைச்சு

-------------------------

ஆணைக்குழுவினால் 2016 இலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கல்வி தொடர்பாக 90 சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்துடன் அவற்றில் 36 சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அமுல்ப்படுத்தப்படாத சிபார்சுகளை வழங்குவதற்காக ஆணைக்குழுவினால் எடுத்த காலம் ஆகக் குறைந்தது 06 மாதங்களாக இருந்ததுடன் ஆகக் கூடியது 03 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| காலப்பகுதி | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| 06 மாதங்களுக்கு குறைய | 5 | 12 |
| 6-12 மாதங்களுக்கு இடையே | 16 | 38 |
| 1-2 ஆண்டுகளுக்கிடையே | 10 | 24 |
| 2-3 ஆண்டுகளுக்கிடையே | 1 | 2 |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | 4 | 10 |




ஆணைக்குழுவினால் மேற்கூறிய காலப்பகுதியில் கல்வி அமைச்சு தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்டு அமுல்ப்படுத்தப்படாத 36 சிபார்சுகளில் 34 சிபார்சுகள் பாடசாலை மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது தொடர்பான சிபார்சுகளாகும். அமுல்ப்படுத்தப்படாத 36 சிபார்சுகளையும் வழங்குவதற்காக ஆறு

மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்பாடு மிகவும் விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் அச் செயற்பாட்டிற்காக ஆணைக்குழுவினால் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தமை மற்றும் 03 சிபார்சுகளை வழங்குவதற்காக மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட நியாயமற்ற காலம் எடுத்திருந்ததனால் முறைப்பாட்டாளர்களுக்கு (உரிய மாணவர்களுக்கு) அதிகளவு அநீதி ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) ஓய்வூதியத் திணைக்களம்**

-----------------------------------------

2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவினால் ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பாக 07 சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 06 சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இம் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஆணைக்குழுவினால் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்ததுடன் ஒரு முறைப்பாட்டினைப் புலனாய்வு செய்வதற்காக மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

### 3.2.5 ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகளின் செயல் முன்னேற்றம்

------------------------------------------------------------------------------------------------------------------------

2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆணைக்குழுவினால் கல்வி அமைச்சு, இலங்கை பொலிசு, ஓய்வூதியத் திணைக்களம் என்பவற்றிற்கு 147 சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை அவற்றில் 87 சிபாார்சுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்ப்படுத்தப்படாமைக்காக தாக்கமளித்த காரணங்கள் பின்வருமாறாகும்.

**(அ) சிபார்சில் போதியளவு தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்காமை**

-----------------------------------------------------------------------------------------------

ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சில் அச் சிபார்சுகளை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக போதியளவு தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விசேடமாக இலங்கை பொலிசு சம்பந்தமாக வழங்கப்பட்ட சிபார்சுகளில் மேற்கூறிய சிக்கல் உருவாகியிருந்தது. ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணம் யாரால் செலுத்தப்பட வேண்டும்.கூட்டாக பொறுப்புக் கூற வேண்டிய விடயங்களின் போது உரிய இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்தும் தரப்பினர்களுக்கிடையே பகிரப்படும் முறைமை, இழப்பீட்டுப்

பணத்தைச் செலுத்துதல் இடம்பெற வேண்டிய முறைமை (பணமாகவா, காசுக்கட்டளைகளின் மூலமா) எத்தரப்பினர்களின் முன்னிலையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் முதலிய சிக்கல்களுடன் சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தன.

**(ஆ) சிபார்சுகளை அனுப்பி வைத்தல்**

-----------------------------------------------------

ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகள் உரிய தரப்பினர்களுக்கு உரிய முறையில் முறையாக அனுப்பி வைக்கப்படாதிருந்த சந்தர்ப்பமாகும். ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தும் போது நிறுவனத் தலைவரினூடாக தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவனத் தலைவருக்கு தெரியப்படுத்தாது உத்தியோகத்தர்களுக்கு சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தன.

**(இ) ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகளை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக ஏனைய நிறுவனரீதியான சட்டவிதிகளின் தாக்கம்**

------------------------------------------------------------------------------------------------------------------------

ஆணைக்குழுவினால் சிபார்சுகளை வழங்கும் போது குறித்த நிறுவன சட்ட விதிகளுக்கு இணங்கும் வகையில் சிபார்சுகளை வழங்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது சிபார்சுகளை வழங்கியிருந்த சந்தர்ப்பம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக ஓய்வூதியத்தை வழங்குவதற்கு ஆணைக்குழு சிபார்சு செய்திருந்த சந்தர்ப்பத்தின் போது ஓய்வூதிய கட்டளைச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஓய்வூதியத்தினை வழங்குவதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ஆணைக்குழு சிபார்சு செய்திருந்ததும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ஒழுங்குவிதிகள் மற்றும் நேர்முகப் பரீட்சை சபையின் சிபார்சுகளின் பிரகாரம் மாணவர்களை பாடசாலைக்குச் சேர்க்க முடியாதிருந்தது.

(ஈ) ஆணைக்குழுவினால் சிபார்சுகளை வழங்கும் போது அது தொடர்பாக இணைவாக விசாரணைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களின் தீர்மானம் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டிருக்காமை.

------------------------------------------------------------------------------------------------------------------

ஆணைக்குழுவினால் சிபார்சுகளை வழங்கும் போது அது தொடர்பாக இணைவாக விசாரணைகளை மேற்கொள்கின்ற ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகள் மற்றும் வழங்கப்படுகின்ற தீர்மானங்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டிருக்காமையின் காரணமாக அந் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற தீர்மானங்களுக்கும் ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கிடையே முரண்பாடுகள் உருவாகியிருந்தது.

04 கணக்காய்வு சிபார்சுகள்

-------------------------------------------

(அ) பதவியணியினரைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

(ஆ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 1996 இன் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்படுகின்றது. அந்த அதிகாரச் சட்டத்தில் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற சிபார்சுகளை பிரதிவாதி அமுல்படுத்த வேண்டுமென ஒழுங்கு விதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அது பிரதிவாதிக்கு சிபார்சினை அமுல்ப்படுத்தாமல் இருப்பதற்கு பாதுகாப்பாக இருக்கின்றது.ஆணைக்குழுவின் தந்திரோபாயத் திட்டத்தில் (2017 - 2019) அதிகாரச் சட்டத்திலுள்ள பலவீனங்கள் தொடர்பாகக் காட்டப்பட்டிருந்தும் 1996 இலிருந்து இன்று வரை இந்த அதிகாரச் சட்டத்திற்கு எதுவித திருத்தமும் செய்யப்பட்டிருக்காமையும் சிபார்சுகள் அமுல்ப்படுத்தாமைக்காக தாக்கமளித்திருந்தது. அதற்கிணங்க அதிகாரச்சட்டத்தை திருத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தல் பொருத்தமானதாகும்.

(இ) 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அறிக்கையில் உரிய ஆண்டின் ஆணைக்குழுவின் அனைத்து செயற்பாடுகளும் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். மேலும் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து

விடயங்களின் பட்டியலும் அவ்விடயம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் அந்த ஒவ்வொரு விடயம் சம்பந்தமாக ஆணைக்குழுவின் சிபார்சுகளும் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவினால் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஆண்டறிக்கையை பாராளுமன்றதில் முன்வைத்தல் வேண்டும்.

(ஈ) ஆணைக்குழுவின் அடிப்படை கடமைகளை நிறைவேற்றும் வகையில் போதியளவான பதவியணியினர் நிறுவனத்தில் இல்லாமை முக்கியமான சிக்கலாக இருந்தது. விசேடமாக முறைப்பாடுகளை புலனாய்வு செய்யும் போது அந்த விடயத்திற்கு நீண்ட காலம் எடுப்பதற்கு பிரதான காரணமாக இந்த நிறுவனத்தில் காணப்பட்ட மனித வளங்கள் பற்றாக்குறை தரப்படலாம். அதன் பிரகாரம் ஆணைக்குழுவினால் தாமதமின்றி முறைப்படியாக அங்கீகரித்த பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) வழங்கப்படுகின்ற சிபார்சுகள் தொடர்பாக பிரதிவாதிக்குத் தெரியப்படுத்தும் போது எப்போதும் நிறுவனத் தலைவரினூடாக வழங்குவதன் மூலம் பரிந்துரைகள் தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கையை இலகுபடுத்த முடியும்.

(ஊ) சிபார்சுகளை வழங்கியதன் பின்னர் அச் சிபார்சு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. ஆணைக்குழுவினால் வழங்கிய சிபார்சுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் அதேபோல சிபார்சுகளை நிறைவேற்றாமை தொடர்பாகவும் முறைப்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தெரிவிப்புக்கள் சம்பந்தமாக உரிய தரப்பினர்களுக்கு பதிலளித்தல் தொடர்பாகவும் ஆணைக்குழு கவனம் செலுத்துதல் வேண்டும்.

(எ) பாடசாலைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது அவை சம்பந்தமாக எப்போதும் கல்வி அமைச்சிற்குத் தெரிவித்து நடவடிக்கை எடுத்தல்.

(ஏ) முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது எப்போதும் முதலாம் தவணை முடிவடைவதற்கு முன்னர் உரிய புலனாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்தி சிபார்சுகளை வழங்குவதன் மூலம் மாணவர்களுக்கு மிகவும் நியாயமான முறையில் செயற்படல்.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## அட்டவணை 01

### வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளின் அங்கீகரித்தவை உள்ள படியானவை மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரம்

---

| | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | வெற்றிடமான காலப்பகுதி |
|---|---|---|---|---|
| மேலதிக செயலாளர் | 01 | - | 01 | 2015.02.013 – 2019.11.06 |
| பணிப்பாளர் (நிருவாகம்) | 01 | - | 01 | 2018.01.05-2019.11.06 |
| பணிப்பாளர் (விசாரணை மற்றும் புலனாய்வு) | 01 | - | 01 | 2012.02.01-2019.11.06 |
| பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் நிருவாகம்) | 01 | - | 01 | 2014.09.01-2019.11.06 |
| பணிப்பாளர் (கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டம்) | 01 | - | 01 | 2015.04.24-2019.11.06 |
| பணிப்பாளர் (சர்வதேச தொடர்புகள்) | 01 | - | 01 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| உதவிப் பணிப்பாளர் | 03 | - | 03 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| சட்ட உத்தியோகத்தர் | 22 | 01 | 21 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| பிராந்திய ஒருங்கிணைப்பாளர் | 10 | 07 | 03 | 2014.10.01-2019.11.06<br>2013.02.07-2019.11.06<br>2019.07.31-2019.11.06 |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | - | 01 | 2017.01.22-2019.11.06 |
| கணக்காளர் | 01 | - | 01 | 12019.06.01-2019.11.06 |
| கணக்கு உத்தியோகத்தர் | 01 | - | 01 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| பயிற்சி மற்றும் கல்வி உத்தியோகத்தர் | 01 | - | 01 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| நூலகர் | 01 | - | 01 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| சிரேஸ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | 05 | - | 05 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| மனித உரிமைகள் | 47 | - | 47 | பதவி |

| | | | | |
|---|---|---|---|---|
| உத்தியோகத்தர் | | | | உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | - | 02 | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 | **-** | **01** | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | **01** | **-** | **01** | **2011.12.01-2019.11.06** |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கடினகருவி / மென் கருவி) | **02** | **-** | **02** | பதவி உருவாக்கப்பட்டிருந்தும் ஆட்சேர்க்கப்படவில்லை. |
| சாரதி | **14** | **12** | **02** | **2018.12.09-2019.11.06**<br>**2015.02.25-2019.11.06** |
| | **118** | **20** | **98** | |

**முறைப்பாடுகள் தொடர்பான விபரம்**

**அட்டவணை 02**

| | **2016** | | **2017** | | **2018** | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு ஆரம்பத்தில் எஞ்சியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை (2015 ஆம் ஆண்டில் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டவை) | | **3576** | | **5750** | | **10241** |
| ஆணைக்குழுவிற்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | **4970** | | **7712** | | **3389** |
| ஆணைக்குழுவின் நோக்கெல்லைக் குரியதல்லாததன் காரணமாக நீக்கிக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **1786** | | **1333** | | **1896** | |
| முறைப்பாட்டாளர்கள் முறைப்பாடு தொடர்பாக அக்கறை காட்டாததன் காரணமாக நீக்கிக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **132** | | **712** | | **1271** | |
| அடிப்படை உரிமைகள் மீறப்படாததன் காரணமாக நீக்கிக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **196** | | **135** | | **315** | |
| ஏனைய காரணங்களின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **300** | | **391** | | **831** | |
| நீக்கிக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **--------**<br>**2414** | | **--------**<br>**2571** | | **---------**<br>**4313** | |
| சிபார்சுகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **41** | | **84** | | **95** | |
| இணக்கத்திற்கு வருவதற்காக நீதிமன்றம் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **71** | | **25** | | **81** | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முறைப்பாட்டாளர்களால் நீக்கிக் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **187** | | **346** | | **175** | |
| இணக்கப்பாட்டிற்கு வந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **83** | | **195** | | **114** | |
| ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | **--------** | **(2796)<br>--------<br>5750<br>=====** | **--------** | **(3221)<br>--------<br>10241<br>=====** | **---------** | **(4778)<br>--------<br>8852<br>=====** |